பரிசுத்த பவுல் ஆலயம்
குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# இதோ,
# தேவனுடைய ராஜ்யம்
# உங்களுக்குள்
# இருக்கிறதே என்றார்.

லூக்கா 17:21

## செய்தி மலர்
## மார்ச் 2025

இதழ் : 24

மலர் : 21








# நம்முடைய சரீரங்களை தேவன் வாசம் செய்யும் பரலோக ராஜ்ஜியமாக மாற்றுவராக

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, எல்லாம் வல்ல இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

இந்த மாதம் லெந்து காலங்களை அனுசரிக்கிற நாம் இன்னும் அதிகமாக ஆண்டவரை கிட்டி சேரவும் அவரின் வருகைக்கு ஆயத்தமாகவும் நம் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒரு படி மேலே செல்லவும் பிரயாசப்படுவோமாக.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார் ,
"இதோ தேவனுடைய ராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கிறதே" (லூக்-17:21) ஆம் பிரியமானவர்களே, பவுல் அப்போஸ்தலன் கூறினார் "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும் தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா?

ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால் அவனை தேவன் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம். (1–கொரி–3:11–23)

நம்முடைய சரீரத்திலே ஆண்டவர் வாசமாயிருந்தால் நமக்குள் இருக்கும் பரலோக ராஜ்ஜியத்தை நாம் கண்டு கொள்ள முடியும்.

## 1. கடவுள் வாழும் இடம்......

பரலோக ராஜ்ஜியத்திலே என்னவெல்லாம் இருக்கிறது என்பதை வெளிப்படுத்தின விசேஷத்திலே நாம் பார்க்கிறோம். அங்கே தேவாதி தேவன் வாசம் செய்கிறார்.

"இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நான் அல்பாவும் ஓமேகாவும் ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றினார்." (வெளி-1:8)
"பரலோகத்திலே தேவாலத்தை நான் காணவில்லை. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம். தீட்டுள்ளதும், அருவருப்பையும், பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை. (வெளி-21:22-27).

ஆம் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம் சரீரத்திலே வாழும் போது நாமும் பரலோக ராஜ்ஜியமாய் மாறிவிடுகிறோம். அங்கே எப்போதும் ஸ்தோத்திரங்களும் துதிகளும், கிருபைகளும் காணப்படும். காரணம் அது ராஜாதி ராஜா வாழ்கிற பரிசுத்த சீயோன். அல்லேலூயா.

## 2.ஒளியுள்ள இடம்......

சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்கிற தேவாதி தேவன் நம் சரீரத்தில் வாசம் செய்யும்போது அந்த ஜீவ ஒளி நம் சரீரத்திலேயும் காணப்படுகிறது. இயேசு சொன்னார் ,
நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன். என்னை பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமால் ஜுவ ஒளியை அடைந்திருப்பான். "நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்க சூரியனும், சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே அதை பிரகாசிப்பித்தது. ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. அங்கே இராக்காலம் இல்லாதபடியால் அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதேயில்லை. அங்கே இராக்காலம் இராது. விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை. தேவனாகிய கர்த்தரே அவர் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதா காலங்களிலும் அரசாளுவார்கள். (வெளி-21:23, 22:5)

இருளின் அதிகாரியாகிய பிசாசுக்கு அங்கே இடமில்லை. நம் சரீரத்தில் ஆண்டவருக்கு இடம் கொடுக்கும் போது இருளின் ஆதிக்கம் அகன்று விடுகிறது. ஜீவ ஒளியாக நம் சரீரங்கள் மாற்றப்படுகிறது. அல்லேலூயா.

## 3.பாவ மன்னிப்பு பெற்ற இடம்.....

"தேவரீர் புஸ்கத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர். ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர் நாங்கள் பூமியிலே அரசாளும் என்று புதிய பாட்டை பாடினார்கள்" (வெளி-5:9,10)

ஆம் பிரியமானவர்களே நாம் பாவ மன்னிப்பை பெற்றிருக்கிறோம். அவருடைய தழும்புகளால் நாம் குணமானோம். அவரே நம்முடைய பரிகாரியாகிய கர்த்தர். அல்லேலூயா.

## 4. நியாயத்தீர்ப்புள்ள இடம்.....

நாம் வழி தவறும்போதெல்லாம் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருந்து பேசுகிறார். நாம் மறுபடியும் மனந்திரும்பி சரியான பாதைக்கு திரும்பபும்படி ஆவியானவர் துணை செய்கிறார்.

"பரிசுத்த ஆவியானவர் வந்து பாவத்தைக் குறித்தும் நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தை கண்டித்து உணர்த்துவார். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியதிற்குள்ளும் உங்களை நடத்துவார்" யோவான்-14:8.13)

ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்க கடவன்" (வெளி-2:7,11,29 3:6,13,22 4:2)

## 5. தேவனுடைய வார்த்தை உள்ள இடம் .....

"அவருடைய கண்கள் அக்கினி ஜீவாலைப் போலிருந்தன அவருடைய சிரசின் மேல் அநேக கிரீடங்கள் இருந்தன. அவருக்கேயன்றி வேறொருவருக்கும் தெரியாத ஒரு நாமமும் எழுதியிருந்தது. இரத்தத்தில் தோய்க்கப்பட்ட வஸ்திரத்தை தரித்திருந்தார். அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே. (வெளி-19:12,13)

ஆம் பிரியமானவர்களே, தேவனுடைய வார்த்தை நம் சரீரத்திலே நிரந்தரமாக வாசம் செய்கிறார். நாம் எந்தப் பாதையில் நடக்க வேண்டும் எப்படி பேச வேண்டும் எப்படி சிந்திக்க வேண்டும் எப்படி செயல்பட வேண்டும் என்பதையெல்லாம் வேத வசனங்கள் நமக்கு சொல்லிக் கொடுக்கிறது. "

நாம் வலதுபுறமாய் சாயும் போதும் இடதுபுறமாய் சாயும் போது வழி

இதுவே இதிலே நடவுங்கள் என்று பின்னால் இருந்து சொல்லும் வார்த்தைகளை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசாயா–30:21)

### 6. ஜெபம் உள்ள இடம்....

அந்தப் புஸ்கத்தை அவர் வாங்கின போது அந்த நான்கு ஜுவன்களும் 24 மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும் பரிசுத்தவான்களுடைய ஜெபங்களாகிய தூப வர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக்கொண்டு ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்தார்கள். (வெளி–5:8)

ஆம் பிரியமானவர்களே, பரிசுத்தவான்களுடைய ஜெபம் தூபம் போல பரலோக ராஜ்ஜியத்தில் எழும்புகிறது. நம்முடைய சரீரத்திலிருந்து நாம் ஏறெடுக்கிற விண்ணப்பங்கள் ஸ்தோத்திரங்கள் எல்லாம் பரலோக ராஜ்ஜியத்தை உடனடியாக சென்று எட்டுகிறது. தானியேல் ஜெபித்தபோது காபிரியேல் தூதன் தோன்றி நீ மிகவும் பிரியமானவன் ஆதலால் நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது நான் அதை அறிவிக்க வந்தேன் என்று கூறினான். (தானி–9:29)

### 7.தியாகமுள்ள இடம்......

தேவனுக்க்காக சாட்சியாக வாழ்ந்து தங்கள் உயிரையே தியாகம் செய்த இரத்த சாட்சிகள் உள்ள இடம் பரலோகராஜ்ஜியம். நமக்குள் தேவன் வாசம் செய்வார் என்று சொன்னால் நமக்கும் அப்படிபட்ட தியாக உணர்வு தோன்றும். நாம் மற்றவர்களுக்காக வாழ ஆசைப்படுவோம்.

" அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும் அவர்கள் தங்களைப் போல கொலை செய்யப்படபோகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகும் அளவும் இன்னும் கொஞ்ச காலம் இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது. (வெளி–6:11)ஆம், பிரியமானவர்களே நாம் குணப்பட்டபின்பு சகல மனிதர்களுக்கும் சுவிசேஷத்தை சொல்லி அவர்களை இயேசுவின் சீஷர்களாக மாற்ற வேண்டும்.

### 8. மரணம் இல்லாத இடம்....

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை முந்தினவைகள் ஒழிந்து போயின என்று விளம்பியது" (வெளி–21:4)

ஆம் பிரியமானவர்களே, பதறாத இருதயத்தை நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். சதாகாலமும் ஜீவிக்கிறவர்கள் வரிசையில் நம்முடைய பெயரும் இடம் பெறுகிறது. நாம் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது. (சங்கீ-116:15) ஸ்தேவான் கல்லெறியுண்டு இரத்த சாட்சியாக மரித்த பொழுது அந்த ஆத்துமாவை வரவேற்பதற்கு இயேசுவானவர் பரலோக ராஜ்ஜியத்தில் தேவனுடைய வலதுபாரிசத்தில் எழுந்து நின்றார். (அப்-7:55).

## 9. துதியுள்ள இடம்.....

தேவ நாமம் தரிக்கப்பட்டு ஜெயம்கொண்டவர்கள் தேவ சுரமண்டலங்களை பிடித்துக்கொண்டு கண்ணாடி கடல் அருகே நின்று தேவனுடைய ஊழியக்காரனாகிய மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியானவருடைய பாட்டையும் பாடி சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாலே தேவரீர் உடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமானவைகள்.

பரிசுத்தவான்களின் ராஜாவே தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள். கர்த்தாவே யார் உமக்கு பயப்படாமலும் உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலுமிருக்கலாம். தேவரீர் ஒருவரே பரிசுத்தர் எல்லா ஜாதிகளும் வந்து உமக்கு உண்பாக தொழுது கொள்வார்கள். உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்று பாடினார்கள். இதே விதமான துதி ஸ்தோத்திரங்கள் பரலோக ராஜ்ஜியமாய் மாறின நம்முடைய சரீரங்களிலிருந்தும் புறப்படும். அல்லேலூயா.
(வெளி-15:2-4)
தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து நம்முடைய சரீரங்களை தேவன் வாசம் செய்யும் பரலோக ராஜ்ஜியமாக மாற்றி மேற்சொன்ன 9 விதமான அடையாளங்களையும் வெளிப்படுத்துவாராக.

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் வரும் மார்ச் மாதம் முழுவதும் தங்கியிருந்து உங்களை அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்

# வாழ்வே நீர்தானே

சொன்னதும் நீர்தானா–இன்று
வந்ததும் நீர்தானா
மறப்பேனோ என்று என்னை
மார்போடு அனைத்ததும் நீர்தானே
வழிமாறி போகாமல் எனைக் காத்த
வழிகாட்டியும் நீதானே
காணாமல் போன என்னை
தேடி வந்ததும் நீர்தானே
இரவும் பகலும் தேடுகின்றேன்
இமைக்காமல் உன் வரவை நாடுகிறேன்
வருகின்றேன் என்றவரும் நீர்தானே
வருகையில் எடுத்துக்கொள்வேன் என்றதும் நீர்தானே
என் வாழ்வே நீர்தானே–அதில்
வசந்தமும் நீர்தானே
நீர் இல்லா இவ்வாழ்வு
நிஜமில்லா பொய்யாகும்
உன்னோடு நான் வாழும்
இந்த நொடி மெய்யாகும்.

உங்கள் அன்பு சகோதரி
K.வனிதா

## சகோதரிகள் செய்தி

### வேதத்தின் மகிமை

கிறிஸ்து இயேசுவில் பிரியமானவர்களே,
நீதி–28:7 வேத பிரமாணத்தை கைக்கொள்ளுகிறவன் விவேகமுள்ள புத்திரன் என்று வேதம் கூறுகிறது. வேதத்தை பின்பற்றி வாழ்பவர்கள் என்றென்றைக்கும் புத்திமானாய் கர்த்தருக்குள் இருப்பார்கள்.
நீதி–6:23–ல் வாசிக்கிறோம்.
வேதமே வெளிச்சம். வேதம் கர்த்தருடைய வார்த்தை நம்மில் இருக்கும் போது நம்முடைய வாழ்வையும் வெளிச்சம் உள்ளதாக இருக்கிறது.

இருள் மாறி போடும். பழைய ஏற்பாட்டில் கூட தேவன் கர்த்தருடைய வார்த்தையின் மகிமையை வெளிப்படுத்தியிருக்கிறார். உபா–6:6–9 வரை வாசிக்கும் போது இன்று நான் உனக்கு கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்ககடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியாய் நடக்கிற போதும், படுத்துக்கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளை குறித்து பேசி அவைகளை உன் கையின் மேல் அடையாளமாக கட்டிக்கொள்வாயாக. அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது. அவைகளை உன் வீட்டு நிலைகாலிரும், உன் வாசல்களிலும் எழுதுவாயாக என்று வாசிக்கிறோம். கர்த்தருடைய வார்த்தையை அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்கொண்டு செல்வதும் அவைகளை குறித்து தியானிப்பதும் அதன் முக்கியத்துவம் அனைத்தும் இந்த வார்த்தைகளை வாசிக்கும் போது உணர்ந்து கொள்ள முடியும்.

## 1.உயிர்க்கும் வார்த்தை....

சங்கீ–119:25–ல் உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும் என்று வாசிக்கிறோம். சரீரத்தில் உயிர் இருந்து ஆவியில் உயிர் இல்லாமல் இருக்கும்போது ஒரு உண்மையான கிறிஸ்தவ ஜீவியம் வாழ முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக தேவனோடே உள்ள உறவு இல்லாத ஒரு மாயமான வாழ்க்கை தான் வாழ வேண்டியாயிருக்கும். அவருடைய வார்த்தை நம்மில் இருக்கும் போது அது நம் ஆத்துமாவை தேவனோடே உள்ள உறவை எப்பொழுதும் உயிர்ப்பித்து கொண்டே இருக்கும் அந்த உயிர்ப்பிக்கிற உறவை ஒருவனாலும் எடுத்துக்கொள்ள முடியாது.

## 2.நிலைநிறுத்தும் வார்த்தை.....

சங்கீ–119:28–ல் வாசிக்கும் போது உமது வசனத்தின் படி என்னை நிறுத்தும் என்று வாசிக்கிறோம். இந்த கடினமான உலகில் நாம் வாழும் வாழ்க்கையில் நிலையாக தேவனோடு கூட இருப்பது என்பது ஒரு சவாலான காரியம். பிரியமானவர்களே கர்த்தருடைய வேதம் நம்முடன் இருக்கும் போது வீழ்ந்தாலும் விழுந்தே கிடக்க மாட்டோம். நம்மை எழுப்ப தேவனுடைய வார்த்தை நம்மில் இருக்கும் போது விழுந்த இடத்திலே நம்மை உறுதியாய் நிலைநிறுத்த தேவனாலே கூடும். இது மனிதனால் கூடாததுதான். நம்முடைய சூழ்நிலையை மாற்ற ஒருவனாலும் கூடாது ஆனால் தேவனால் எல்லாம் கூடும்.

## 3.உணர்வை தரும் வார்த்தை....

சங்கீ-119:34-ல் எனக்கு உணர்வை தாரும் அப்பொழுது உமது வேதத்தை பற்றிக்கொண்டு என் முழு இருதயத்தோடு அதை கைக்கொள்ளுவேன் என்று வாசிக்கிறோம். தேவனுக்கு பிரியமில்லாத வழியில் நடக்கும் போது நமக்கு உணர்வு இல்லை என்றால் நாம் செய்வது தவறு என்று தெரியாது. அதனால் தான் தாவீது உணர்வுள்ள இருதயத்தை தாரும் என்று கூறுகிறார். ஆவியின் கண்கள் பிறர் துன்பப்படும் போது உதவும் கரம் சத்துரு விழும் போது கூட உதவுவது போன்ற நற்கிரியைகள் வெளிப்படும். தேவ வார்த்தை நம்மில் நிலைகொண்டிருந்தால் அவர்களுக்கு உதவ உணர்த்துவது தேவனுடைய வார்த்தை தான். புதிய ஏற்பாட்டில் கூட சதையான இருதயத்தையும் கல்லான இருதயத்தையும் குறித்து வாசிக்கிறோம். சதையான இருதயத்தில் தேவ அன்பும், வார்த்தையும் நிரம்பி நாம் ஜீவிக்கும் போது நமது கிரியை கண்டு அநேகர் ஆண்டவரின் பக்கம் வருவார்கள்.

## 4. திடப்படுத்தும் வார்த்தை....

சங்கீ-119:49-ல் நீர் என்னை நம்ப பண்ணின வசனத்தை உமது அடியேனுக்காக நினைத்தருளும் என்று வாசிக்கிறோம். நாம் அநேக ஜெப விண்ணப்பித்திற்காக ஜெபிப்போம். அதில் சில விண்ணப்பங்களுக்கு தேவன் உடனே பதிலை தருவார். சில விண்ணப்பங்களுக்கு நாம் காத்திருப்பது அவசியமாயிருக்கிறது. அப்பொழுது நாம் துவண்டு போகாமல் இருக்கதான் தேவனுடைய வார்த்தையை அறிக்கை பண்ண வேண்டும். ஏனென்றால் அவருடைய வார்த்தை தான் மனமகிழ்ச்சி. அதுவே சிறுமையில் எனக்கு ஆறுதல் என்று தாவீதை போல நாமும் வசனத்தை வைத்து ஜெபிக்க வேண்டும்.

பிரியமானவர்களே, சங்கீ-19:7-ல் கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. நம்மை உயிர்ப்பிக்க உணர்வுள்ளவனாக நிலைநிறுத்த, திடப்படுத்த தேவனுடைய வார்த்தையை இருதயத்தில் ஏற்று, அதை கிரியையின் மூலம் வெளிப்படுத்துவோம். தேவ வார்த்தையின் மூலம் இயேசு எப்படி பிசாசை வென்றாரோ அது போல நாமும் நம்முடைய வாழ்வில் வருகிற தடைகளை வார்த்தையை வைத்து வெல்வோம்.

தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

உங்கள் அன்பு சகோதரி

**ஆஸ்லின் சுபின்சிங்**

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி–12:2 ) "

செல்வன். செரிடன் சிமியோன் பால்ராஜ்
சகோதரி. வித்யா வில்சன்
சகோதரி. அனிதா திவ்யராஜ்
சகோதரி. சாரா சவிதா எட்வர்ட்
செல்வன். ஜேடன் பால் கிரண்குமார்
சகோ. சுனில் சுந்தர்ராஜ்
சகோ. ஜெயக்குமார்
செல்வன். டியோன் பென்சாம்
செல்வன். ஆல்வின் வர்கீஸ்
சகோதரி. அனுஷா ஜெய்நன்
செல்வன். ஜோயல் ஜென்சர் ஜெயல்சிங்
செல்வி. ஜான்சி ராணி ராஜவேல்
சகோ.சாமுவேல்
செல்வன். ஜான்ராஜ் ராஜவேல்
செல்வி. நிகிதா இவான்ஜிலின் அருண்

சகோ. வெனிஸ்
செல்வன். ஜெகு சாமுவேல் செல்வா சிங்
சகோதரி. ஏல்ஜீவா சாமுவேல்
செல்வன். எட்ரியல் கெமியுல் தாஸ்
செல்வன். யானிங் அருண் ஆரோக்யதாஸ்
சகோ. ஏசுரத்தினம்
செல்வி. ஸ்டேபனா சதீஸ் குமார்
செல்வி. அபியா செல்வி தர்மர்
செல்வன். ஜெஸ்வின் ஆரோக்யதாஸ்
சகோதரி. ஜமீலா ஜாய்ஸ் நக்கீரன்
சகோதரி. எழில் டேனியல் ராஜ்
சகோ. பால் டேனியல்
செல்வி. ஜாஸ்மின் ஏஞ்சல் தாமஸ்
சகோதரி. ஷீபா ஜீவல் சிங்







## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)




திருமதி / திரு. சைமன் ஜெயக்குமார்
திருமதி / திரு. சுகுமாரன்



# 2025 – மார்ச் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/3/2025 | சகோ. பிராங்ளின் | சகோ.ஸ்டாலின் |
| 9/3/2025 | சகோ. சுபின் சிங் | சகோ.சாம் ஆனந்த் |
| 23/3/2025 | சகோ. சுகுமார் | சகோ. அசோக்குமார் |
| 30/3/2025 | சகோ. சிவக்குமார் | சகோ. ரவி ஜான் பீட்டர் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/3/2025 | சகோ. சுகுமார் அறுப்பின் பண்டிகை | சகோ.ஸ்டாலின் |
| 14/3/2025 | பாஸ்டர்.விக்டர் ஜான்சன் லீபனோன் பெத்தேல் ஊழியங்கள்–திருநெல்வேலி | |
| 21/3/2025 | உபவாச திருவிருந்து ஆராதனை Evangelist Presley-Pondichery | |
| 28/3/2025 | தாய்மார்கள் தின ஆராதனை | |

## ஆராதனை ஒழுங்குகள்

**05/3/2025 சாம்பல் புதன் ஆராதனை**
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு – நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

**13/3/2025 அன்று முழு இரவு ஜெப ஆராதணை**
இடம் – பாஹீலில் ஜெப வீடு – நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**28/3/2025 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் ஜெப வீடு – நேரம் - 6:30 PM-8:30 -வேத வினா பகுதி - லுக்கா

**29/3/2025 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
இடம் – பாஹீலில் ஜெப வீடு –நேரம் –6:30 PM– 8:30 வேத வினா பகுதி – அப்போஸ்தலர்

**செவ்வாய்கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:00 வரை

**திங்கட்கிழமை**
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

# 2025 மார்ச் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள், என்றது யார்?
2. விசுவாசத்தினால் வராதது என்ன? என்று பவுல் சொல்லுகிறார்?
3. விசுவாசத்தில் வல்லவர் யார்?
4. அக்கிரமகாரருக்காக மரித்த ஒரு நீதிமான் யார்?
5. கனம் பண்ணுவதில் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்ளுங்கள் என்றவர் யார்?
6. ரோமாபுரியில் கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட ஸ்திரீ யார்?
7. தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்பு கொடுத்தார் என வாசிப்பதெங்கே?
8. தேவன் அவர்களை கேடான சிந்தனைக்கு ஒப்பு கொடுத்தார் என்று வாசிப்பதெங்கே?
9. தீமையை வெறுத்து நன்மையை பெற்றுக் கொண்டிருங்கள் என்று வாசிப்பதெங்கே?
10. எனக்கு இடைவிடாத மன வேதனையும் உண்டாயிருக்கிறது என்றது யார்?
11. தேவனுடைய வாக்குத்தத்தத்தை குறித்து அவன் விசுவாசமாய் சந்தேகபடாமல்... விசுவாசத்தில் வல்லவனானவன் யார் ?
12. மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து அவ பக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்று வாசிப்தெங்கே ?
13. தேவன் தான் முன்னறிந்து கொண்ட தம்முடைய ஜனங்களை தேவன் தள்ளிவிடவில்லை என வாசிப்பதெங்கே?
14. அவர்கள் வாய் சபிப்பினாலும் கசப்பினாலும் நிறைந்திருக்கிறது என வாசிப்பதெங்கே?
15. கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள் என்றது யார்?

**விடைகளை வருகின்ற 20-04-2025 க்குள்**
(WhatsApp - +965 66159784 ) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்
**“ரோமர் ”**
புத்தகத்தில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

# 2025 - பிப்ரவரி மாத வேத வினாவுக்கு விடை

1. மலைகள் மேல் குதித்தும்
   மேடுகள் மேல் துள்ளியும் –உன்னதபாட்டு 2 : 8
2. பாதாளத்தை போல் – உன்னதபாட்டு 8 : 6
3 குளங்களை – பிரசங்கி 2 : 6
4. மூடன் , ஞானி – பிரசங்கி 2 : 16
5. அசட்டை – உன்னதபாட்டு 8 : 7
6. பாகால் ஆமோன் – உன்னதபாட்டு 8 : 11
7. ஐயோ –பிரசங்கி 4 : 10
8. மாயை –பிரசங்கி 5 : 7
9. தோட்டத்துக்கும் ,
   கந்தவர்க்கப்பாத்திகளுக்கும் – உன்னதபாட்டு 6 : 2
10. பழுத்த கனிகளை பார்க்க – உன்னதபாட்டு 6 : 11
11. நோவு பெருத்தவன் – பிரசங்கி 1 : 18
12. பானையின் கீழ் எரிகிற முள்ளுகளின்
    படபடப்பைப்போல் –பிரசங்கி 7 : 6
13. நேசரை – உன்னதபாட்டு 5 : 6,7
14. தூதாயீம் புதியவைகளும் பழையவைகளுமான
    கனிகள் – உன்னதபாட்டு 7 : 13
15. புத்தி , யுக்தி , நிதானம் – பிரசங்கி 2: : 21

## 2025- பிப்ரவரி வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis.வனிதா
Sis.விக்டோரிய ராஜன்
Sis. ஜீனா சதீஸ்குமார்
Sis. பத்மினி வர்க்கீஸ்
Sis. பிரிசில்லா செங்குட்டுவன்
Sis.சுகந்தி தம்புகமார்
Sis.செலின் டேவிட
Sis.ஜான்சி ராணி

Sis.ஜெஸ்லட்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis. சாந்தி
Sis. சுபா ஸ்டீபன்
Sis. மரியா குளொரி தாஸ்
Sis. தயா ஏசரத்தினம்
Bro. எபினேசர்
Bro. செங்குட்டுவன்

## 2025- ஜனவரி வேத வினாவுக்கு பதில் எழுதி விடுபட்ட நபர்

SIS. சுபா ஸ்டீபன்

# quiz for children



(Write the answers using the New King James Version. Children those who are studying above SECOND Standard can participate)

1. What did God command?
2. To whom did Jesus say that upon this rock I will build my church?
3. The son of man has come to save that which was _______.
4. Whom did Jesus take upon a high mountain?
5. Who came to you in the way of righteousness?
6. What kind of faith ye shall have to say unto this mountain, remove hence to yonder place?
7. There is none good but one that is ___________.
8. Whose is this image and superscription?
9. Who came to see the sepulchre?
10. Where was He sitting when the disciples came unto Him Privately?

Note:- ANSWERS can be taken from **Matthew 15 to 28.** Submit your answers to the Sunday School Teachers on or before 22.03.2025 Please mention the reference along with the answers.

## மனிதன் மனிதனாக வாழ 13 அம்சங்கள்

**1. மிகப்பெரிய வெகுமதி - மன்னிப்பு**

**2. மிகவும் வேண்டியது - பணிவு**

**3. மகிவும் வேண்டாதது - வெறுப்பு**

**4. மிகப்பெரிய தேவை - நம்பிக்கை**

**5. மிகக் கொடிய நோய் - பேராசை**

**6. நம்பக் கூடாதது - வதந்தி**

**7. ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு**

**8. செய்ய கூடியது - உதவி**

**9. செய்யகூடாதது - நம்பிக்கை துரோகம்**

**10. விலக்க வேண்டியது - சோம்பேரித்தனம்**

**11. உயர்வுக்கு வழி - உழைப்பு**

**12. நழுவ விடக்கூடாதது - வாய்ப்பு**

**13. மறக்க கூடாதது - நன்றி**

**தொகுப்பு கிறித்துவின் பணியில்**

# நீ அன்பு கூறுகிறாயா?

இயேசுவானவர் இவ்வுலகத்தில் எவ்வளவாய் அன்பு கூர்ந்தார் அவர் எப்படி வாழ வேண்டும் என்று சொன்னது மட்டுமல்ல அப்படியே வாழ்ந்தும் காட்டினார்.

"நீ உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக" என்ற வேத வசனத்தின் படி நாம் ஒவ்வொருவர் மீதும் உண்மையான அன்பு அதாவது வெறும் உதட்டினால் அல்ல உள்ளத்தின் ஆழத்தில் இருந்து அன்பு காட்ட வேண்டும் என்பதே நம் ஆண்டவரின் நோக்கமாயிருக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் இத்தகைய அன்பை நம்மால் பிறருக்கு கொடுக்கவோ இல்லை பிறரிடமிருந்து பெறவோ முடிகிறதா என்று பார்த்தால் மிகவும் குறைவாகவே உள்ளது.

நாம் பிறனுடைய குறைகளை கவனிப்பதிலே கவனம் செலுத்திகிறோம்,நாம் அவர்களுடைய தவறுகளை உள்ளத்தில் வைத்துக்கொண்டு உதட்டினால் புன்னகை செய்து அவர்களோடு நம் வாழ்க்கையை பயணிக்கிறோம் , இது நம்மை சுற்றி இருப்பவர்களுக்கு தெரியாது என்று நினைத்துகொண்டிருக்கிறோம்.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம் இருதயத்தின் ஆழத்தில் உள்ள நினைவுகளை ஆராய்ந்து பார்க்கிற தேவன் , மற்றவர்களை நியாயம் தீர்க்க நாம் நியாயாதிபதிகள் அல்ல , நம்முடைய நியாயாதிபதி கர்த்தர் ஒருவரே.

நம்முடைய தவறுகளை திருத்திக்கொண்டு மற்றவர்களும் பாவ வழியில் செல்லாதபடிக்கு அவர்களுக்காகவும் ஆண்டவரிடத்தில் சமாதானத்தோடும் இருப்பதே நமக்காக முள்முடி ஏந்தி சிலுவை சுமந்து, சிலுவையில் தன் ஜீவனை கொடுத்த இயேசுவக்கு நாம் செலுத்தும் நன்றி பலி. கர்த்தர் நாமம் மகிமைப்படுவதாக ஆமென். .

வாலிபம் இயேசுவுக்கே..

# நம்மை ) பதம் பார்க்கும் பத்து கேள்விகள்



**நம் ஆவிக்குரிய நிலையில் செழிப்பதற்கு கீழ்காணும் கேள்விகளை தினசரி இல்லாவிட்டாலும் அவ்வப்போது நம்மை நாமே கேட்டு பார்த்துக் கொள்வது நல்லது இல்லையா?**

1. நான் இன்று யாராகிலும் ஒருவரை .. என் சிந்தையிலும் கூட நியாயம் தீர்த்தேனா?
2. நான் என் இதய பூர்வமாய் முற்றிலும் மன்னியாமல் யாரேனும் இருக்கிறார்களா.?
3. நான் பிறரை பற்றி சொல்லப்பட்ட தீமையான விஷயங்களை அவை உண்மைதானா என சோதிக்காமலே நம்பிவிட்டேனா?
4. இன்று முழுவதும் என் சிந்தைகள் தூய கற்புள்ளதாய் இருந்ததா?
5. நான் என்னை பகைத்தவர்களுக்காகவும் என்னை துன்பறுத்தினவர்களுக்காகவும் ஜெபித்தேனா?
6. நான் இன்று யாரேனும் ஒருவரிடம் பொறாமை கொண்டேனா?
7. நான் என் சகவிசுவாசிகளை மேன்மையாக எண்ணி அவர்களில் மகிழ்ந்திருந்தேனா?
8. நான் என் சக சகோதரார்களின் ஆவிக்குரிய மற்றும் சரீர தேவைகளுக்காக அக்கரை காட்டினேனா?
9. நான் என்னை அறியாமலேயே யாருக்காவது தீங்கு இழைத்தேனா?
10. நான் சொன்ன என் வார்த்தைகளையும் கொடுத்த வாக்குகளையும்

## ஒண் மினிட் ப்லீஸ்

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !

தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ.கிறிஸ்டோபர் அவர்களிடத்திலும்

திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால் தங்களது காணிக்கைகளை சகோ. பிராங்கிளின் அவர்களிடத்திலும்,

போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரண் அவர்களிடத்திலும்,

ஆலயம் கட்டுமான ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. ஜெகநாதன் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்கமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# Kids Corner

Name: Hannah Faith

I am fearfully and wonferfully made.

PSALM 139:14



**Hannah Faith**

# The Lod is my Strength

I am weak I need a dose of strength
I love you Lord you are my strength

I am shaken I need something to hold on
I love you Lord you are my rock

I am vulnerable I need a place of protection
I love you love you Lord you are my fortress

I am trapped again... I need your help getting free
I love you Lord you are my deliverer

I am running away from the enemy I need a safe place to hide
I love you Lord you are my refuge

I am in hand-to-hand combat in temptation
I love you love you Lord you are my shield

I am spiritually hungry I need a place of nourishment
I love you love you Lord you are my strong hold

I am a sinner I need a Savior
I love you Lord you are my Salvation

I love you Lord You are my GOD!!

*(From Ron Moore)*

**By**
**Jessica Praisy**

# கடந்த மாத நிகழ்வுள் சில



## ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

# செயற்குழு உறுப்பினர்கள்

## முதன்மை ஊழியர்

**Bro.S.ஸ்டாலின்**

Ph.66021072 - 96760452

## செயலாளர்

**Bro.S.சுகுமார்**

Ph.99837646

## பொருளாளர்

**Bro.S.சிவக்குமார்**

Ph.97224276

### பெண்கள் ஐக்கிய தலைவி

**Sis.செலின் டேவிட்**

Ph.65967170

### வாலிப ஐக்கிய தலைவர்

**Bro.சுபின்சிங்**

Ph.65197164

Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL

Church e-mail ID- ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது
ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய்
இருக்கிறது.

**Church Postal Address**
Your Name
PO.Box No: 46795,
Fahaheel, 64018,
Kuwait

*Private Circulation Only*